# பெற்றோர் ஆதரவு கழகம்

லேக்சைட் தொடக்கப் பள்ளி



## பொறுமை

## ஆதரவு

## கருணை

## எங்களைப் பற்றிய ஒரு முன்னுரை

கல்வியைப் பற்றி மட்டுமே கவலைப்படுகின்ற பெற்றோர்கள் அல்லர் நாங்கள். முழுமையான வளர்ச்சியும்,திறமையுடன் கூடிய அறிவைத் தருகின்ற கல்வியை எடுத்துரைக்கும் ஆதரவுக் குழு நாங்கள்.

இன்றைய காலக்கட்டம் நாமோ அல்லது நம் பெற்றோரோ படித்த கறுப்பு வெள்ளை நாட்கள் போல் அல்லாமல் வண்ணமயமாக மட்டும் அல்லாமல் மிக துள்ளிய வண்ணம் மற்றும் மிக மிக துள்ளியம் என வண்ண அளவு கோலை அதிகரித்துக் கொண்டே செல்லும் நவீன கால கட்டத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது.

நாம் படிக்காததை அல்லது படித்து மறந்ததை இந்த பெற்றோர் ஆதரவுக் கழகம் மூலம் நாம் நம் அறிவை புதுப்பித்துக் கொள்ள இந்த கழகம் ஒரு மிகச் சிறந்த வழிகாட்டியாகும்.

ஆதரவுக்குழுவான நாங்கள் பள்ளிக்கும் பெற்றோர்களுக்கும் இடையே ஒரு பாலமாகவும், ஒரு தொடர்பு இணையமாகவும், அறிவுத்திறனை பரிமாற்றிக் கொள்ளவும் வேறு வேறு கலாச்சாரங்களை பரிமாற்றிக் கொள்ளவும் இந்த குழு உதவுகின்றது. பெற்றோர்களுக்கு மட்டும் அல்லாமல் குழந்தைகளுக்கும் இடையே பரிமாற்றிக் கொள்ளவும் உதவுகின்றது.

பெற்றோர் ஆதரவுத் தொண்டர்களான நாங்கள் பள்ளி நிகழ்ச்சிகளில் மட்டும் பங்கு கொள்வதற்காக இந்த குழு அமைக்கப்படவில்லை அதனுடன் சேர்ந்து குழந்தைகளுடன் ஒரு அன்பு கலந்த ஆரோக்கியமான உறவை ஏற்படுத்திக் கொள்ளவே இந்த குழு அமைக்கப் பட்டுள்ளது.

அன்பும், அக்கறையும்,அறிவும் காட்டி வளர்த்த ஒரு குழந்தை சமப்படுத்தப்பட்ட உணர்ச்சியுடன் கூடிய ஓர் ஆரோக்கியமான அறிவுத் திறனுடன் கூடிய ஒரு குழந்தையாக வளர்கின்றது.

சந்தோஷமாக வளர்கின்ற குழந்தை ஆரோக்கியமாக வளர்கின்றது. இவ்விரண்டும் கலந்து வளர்ந்த குழந்தை நல்ல அறிவுத்திறனை பெறுகின்று. அன்பு, ஆரோக்கியம், அறிவுத்திறன் இவை அனைத்தும் பெறும் குழந்தையாக, சமுதாயத்தில் ஒரு நல்ல நிலையை அடைய எங்களின் பெற்றோர் ஆதரவுக் கழகம் உதவுகின்றது.



## நோக்கம்

இக்கழகம் ஏராளமான ஆதரவும் உதவியும் செய்யும் தொண்டர்களைக் கொண்டு ஆசிரியர்களுடனும் பெற்றோர்களுடனும் கை கோர்த்து துடிப்புடன் ஓர் ஆரோக்கியமான சூழலுடன் இயங்கும்.



## குறிக்கோள்

அனைத்து பெற்றோர்களுடன் நட்புடனும், நல்ல பிள்ளை வளர்ப்பின் நுட்பங்களை பரிமாற்றிக் கொண்டும்,சமுதாயத்திற்கு சேவை செய்ய விரும்புவோர்க்கு நல்லதொரு பாலத்தை அமைத்துக் கொடுத்திடுவோம்.

சேர்வதர்க்கு **psglakesidepri@gmail.com** தொலைபேசி எண் ***8684 8726 / 8822 9673.***